அறிவுப் புரட்சி மூலம் அடிப்படையை மாற்றி அமைப்போம்

Phone No 4502 | Regd. No. M. 5458

விலை அரை அணா | இலங்கையில் [illegible]

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. | MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (29—6—50) | 2 | வெளியூர் (30—6—50) | இதழ் 291

யதேச்சாதிகாரம் உள்ள இடத்தில் புரட்சி தோன்றுவது திண்ணம்

இன்றைய ஆட்சியாளருக்கு நல்லாட்சி நடத்துவதில் நாட்டமில்லை

அடக்குமுறை பசிகொண்டு அலைகிறது சர்க்கார்

ஆரணி மாநாட்டில் அன்பழகன் தலைமையுரை

வட ஆற்காடு மாவட்ட திராவிடப் பெருங்குடி மக்களே! மாநாட்டுப் பிரதிநிதிகளே! தாய்மார்களே! தோழர்களே! இம் மாவட்ட மாநாட்டிற்கு என்னைத் தலைவராகத் தெரிந்தெடுத்தமைக்கு, எனது உளமார்ந்த நன்றியுரித்தாகும் என்றாலும், மட்டற்றமகிழ்ச்சி கொள்வதாகக் கூற விரும்பவில்லை, பொறுப்பும், கடமையும், தலைமையேற்கின்றவருக்கு அதிகமாகின்ற காரணத்தால். என்னைக் குறித்துப் பலபடப் பாராட்டிப் பேசியதோழர்கள் தமது அன்பின் காரணத்தாலும் அவ்வாறு நான தொண்டாற்றவேண்டுமென்ற ஆர்வ மிகுதியாலுமே அளவுக்கு மேலும்புகழ்ந்துள்ளார்கள் என்றே கருதுகிறேன். அவர்களுடைய பாராட்டுரைக்குத் தகுதியுடையவனாக விளங்க நான் முற்படுவேன், என உறுதி கூறுகிறேன்.

இம் மாநாடு செல்வமும், செல்வாக்கும் பெருத எளிய தோழர்களாலேயே நடத்தப்படுகிறதெனவும் எனவே குறைபாடுகள் இருக்கக் கூடுமெனவும், வரவேற்புத் தலைவர் கூறினர். உண்மையில், ஏழை, எளிய மக்கள் முன்வந்து நடத்துகின்ற காரணத்தால்தான் இவ்வளவு பேராதரவும், பொது மக்கள் கூட்டம் திரண்டுள்ளது என்பதும், நாட்டு மக்களின் நன்மைக்குப் பாடுபடுபவர்கள் ஏழை எளியவர்களாகத்தான் இருக்கமுடியும் என்பதும், அதுவே நம் கழகத்தின் வளர்ச்சிக்குத்தக்க ஓர் எடுத்துக்காட்டு என்பதும் அறிந்திடும் எவரும் மகிழ்ந்திடாமல் இருக்கமுடியாது

மாநாடு கூடுவதேன்?

நமது மாநாடு நமக்கு ஒரு கட்சி இருக்கிறது என்பதைக் காட்டுவதற்கு அல்ல, தலைவர்களுக்கு விளம்பரம் தேடுவதற்கு அல்ல கட்சிக்குச்செல்வாக்குத் தேடி, அதன் மூலம் பிழைப்பு நடத்துவதற்கு அல்ல, வருகிற தேர்தலில் மக்களிடம் ஓட்டுப்பெற்றுப் பதவிபெறுவதற்கல்ல, தொண்டர்களின் சுயநலத்திற்காகவோ, கட்சிக்காரர்களின் இலாப நோக்கத்திற்காகவோ கூட்டப்பட்டதல்ல என்பதைப் பொதுமக்கள் உணர்ந்து கொள்ள [illegible]ண்டும்

[illegible]ட்டிலே ஏற்பட்டுள்ள சீர்கேட்டைக் களைவதற்கு மக்கள் வாழ்க்கையிலேயே காணப்படும் மடமையைப் போக்குவதற்கு ஆட்சியாளரிடத்திலே வளர்ந்துள்ள

அசம்பாவத் திமிர் போக்கை அடக்குவதற்கு, கொடுமைகள் களையப்பட்டு, வறுமை விரட்டப்பட்டு நல்லாட்சி மலரத் துணை செய்வதற்குத்தான் திராவிட முன்னேற்றக்கழகம் இம்மாநாட்டைக் கூட்டியுள்ளது.

வளருகிறோம்

கடந்த பத்துமாத காலமாக தமிழ் நாட்டின் பல பகுதிகளிலே மாவட்ட, மாநாடுகள் நடைபெற்றுள்ளன. திராவிட முன்னேற்றக் கழகம்-தோற்றுவிக்கப்பட்டவுடன் —முதல் மாநாடு திருச்சியிலும் அடுத்து சென்னையிலும். கோவை மாவட்டமாநாடு கணியூரிலும், தெ ஆ. மாவட்ட மாநாடு குறிஞ்சிப்பாடியிலும், மதுரை மாநாடு சோழவந்தானிலும், ஒன்றைவிட ஒன்று உணர்ச்சியிலே, உற்சாகத்திலே, உறுவான பணியிலே, போட்டியிடும்முறையிலே நடைபெற்று வந்துள்ளன மக்கள் காட்டி வந்துள்ள ஆர்வமும் ஒத்துழைப்பும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

தமிழ் நாட்டின்மூலைமுடுக்குகளிலெல்லாம், தி. மு க கிளைகள் ஏறத்தாழ 500 கிளைகள் தோன்றியுள்ளன பத்துமாதத்திலே—இந்த வளர்ச்சி, [illegible]ன் பதை எண்ணும்போது, [illegible] மக்களின் வருங்கால[illegible] குறித்து உறுதிபிறக்கின்[illegible] மக்கெல்லாம். தமிழ் மக்[illegible] வாழும் பகுதிகளில் மட்[illegible]

(தொடர்ச்சி 4-[illegible]ம் பக்கம் பார்க்க)

கொரியாவில் அயலார் துருப்புகளை அனுமதிக்கும் விஷயம்

(:—:)

இந்தியாவும் எகிப்தும் ஆதரிக்காதாம்

லண்டன், ஜூன் 27 — கொரியாவில் அமெரிக்க துருப்புகளை உபயோகிக்க அனுமதிக்கும்படி ஐ. நா. பாதுகாப்புக் கௌன்சிலைக் கேட்கலாம் என்று, யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

ஆனால், இவ் விஷயமாக யுனைடெட் ஸ்டேட்ஸ் மிகவும் ஆலோசித்து, இதனால் ஏற்படும் சாதகபாதகங்களையும் கவனித்து வருவதாகக் கூறப்படுகிறது.

ஐ. நா. விடம்நம்பிக்கையை யுனைடெட்ஸ்டேட்ஸ் வைக்கும் என்றும், வட கொரியாவுக்கு எச்சரிக்கை விடும்படி ஐ. நா வை கேட்டுக் கொள்ளும் என்றும் கூறப்படுகிறது.

[illegible]ரியாவில், தனிப்பட்ட நாட்டின் துருப்புகள் உபயோகிக்கப்படவேண்டும் என்கிற தீர்மானம், பாதுகாப்புக் கௌன்ஸிலில் முன்வரும் பட்சத்தில், இந்தியாவும், எகிப்தும் அதை ஆதரிக்காது என்று தெரிய வருகிறது.

எச்சரிக்கையை அலட்சியம் செய்தால்?

ஐ. நா. அமெரிக்கா கேட்டுக் கொள்கிறபடி வட கொரியாவுக்கு எச்சரிக்கை விடுவதாகவே வைத்துக்கொண்டாலும், வட கொரியா அதை அலட்சியம் செய்துவிட்டால், அதன் பிறகு ஐ நா. என்ன செய்யும் என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. இப்பொழுதுள்ள நிலையில் அரசியல், பொருளாதார பகிஷ்காரத்தினால் ஆகக்கூடியது எதுவும் இல்லை.

ஐ நா கூட்டு முன்னணி அமைக்குமா?

ஐ. நா. சாஸனத்திலுள்ள 43 ஷரத்துப்படி ஐ. நா. கௌன்ஸிலுக்கு மெம்பர் நாடுகள், தங்கள் படைகளை அவசியமானால் கொடுத்துதவவேண்டும் என்று இருக்கிறது. [illegible]மானவரை, கௌன்ஸில் மூலமே தான் நேரிடை நடவடிக்கையை ஆரம்பிக்க யுனைடெட்ஸ் விரும்புகிறது. ஆனால், தென் கொரியா சர்க்கார் கவலைகரமாகிவிடாமல் தடுக்க, சகலவித முயற்சிகளையும் அமெரிக்கா செய்யும் எனத் தெரிகிறது.

அடுத்த சில நாட்களுக்குள், கொரியா விவகாரம் திருப்திகரமாக தீர்க்கப்படாவிட்டால், மிலே முன்பு இருந்தது போன்ற நிலைமை ஏற்பட்டுவிடும் என்று மாஞ்செஸ்டர் கார்டியன் பத்திரிகை கூறுகிறது. எல்லாருக்கும் வெளியில் இருந்து கொண்டு, உள்ளே போக தூண்டிவிட்டு, தாங்கள் ஒதுங்கியிருந்ததையே இப்பத்திரிகை குறிப்பிடுகிறது.

வழக்கு வாபஸ்'

அறந்தாங்கி ஜூன் 27— "சவுக்கடி" புத்தகத்தின் காரணமாக தோழர்கள் எம் எஸ். சிவசாமி, இராக. தங்கப்பழம் அருணாசலம், ஆகியோர் மீது, 153 (எ) 292 295 பிரிவுகளின்படி தொடரப்பட்டிருந்த வழக்கானது, 26–6–50 தேதி, மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. "சர்க்கார் இந்த வழக்கை வாபஸ் வாங்கிக்கொள்வதால் உங்களை விடுதலை செய்கிறேன்" என்று, சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் தீர்ப்பளித்தார்.

'கம்யூனிஸ்டு அல்லாத நாடுகளை காப்பாற்ற புறப்படுங்கள்'

(0)

"விமானப் படையும் கடற் படையும் விரைந்து செல்லட்டும்"

(—)

அமெரிக்க படைகளுக்கு ட்ரூமன் உத்தரவு

வாஷிங்டன், ஜூன் 27— "ஆசியாவிலுள்ள கம்யூனிஸ்டு அல்லாத நாடுகளை [illegible]க்கும் பாதுகாப்பு அளிக்கவும், கொரியாவுக்கு உதவி புரிய கடற்படையும், விமானப்படையும் விரைந்து செல்லுமாறும் அமெரிக்கப் [illegible] ட்ரூமன் இன்று உத்தரவிட்டுவிட்டார்.

போர்மோசா மீது, தாக்குதல் ஏற்பட்டால், அதனைச் சமாளிக்க 7-வது படைக்கு உத்தரவிட்டுள்ளார், அத்துடன் பிலிப்பைனுக்கும், இந்தோ சீனாவுக்கும் இராணுவ உதவி அளிக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும் தெரிவித்தார்" அவர் மேலும் தெரிவித்ததாவது:—

கம்யூனிச படையெடுப்பின் மூலம் சுதந்திர நாடுகளை ஆக்ரமிக்க ஆரம்பித்துவிட்டது என்பதையே கொரியாப்போர் விளக்குகிறது. இச்சமயத்தில் போர்மோசாவில் கம்யூனிஸ்ட்படைகள் இருப்பது பசிபிக் பகுதி [illegible]த்தை விளைவிப்பதாகும். [illegible] தென் கொ[illegible]வின் பாதுகாப்புக்கென வைக்கப்பட்டிருந்த படைகளை, வட கொரியப் படைகள் [illegible] தாக்கியிருக்கின்றன. இம[illegible] திரி செய்யமை; சிறந்த அமைதிக்கு வழிகோலு[illegible] ஐ நா. சபை சொல்லியும் கேளாது தாக்குதல் நடத்தி வருகின்றனர். எனவேதான் யு எஸ். படைகள் தென் கொரியாவுக்கு உதவி புரிய வேண்டுமென உத்தரவிட்டேனென்" என்று கூறினர்.

சென்னை-திருவாங்கூர் கொச்சிக்கு பர்மா அரி[illegible]

சாதிர் என்ற கப்பல் 7[illegible] பர்மா அரிசியை ஏற்[illegible] 1950 ஜூன் 25-[illegible] கொச்சித் துறைமுகத்[illegible] சேர்ந்தது. இந்த அரி[illegible] கூர்—கொச்சிக்கு 4,000 [illegible] சென்னைக்கு 8,322 டன்[illegible] ஒதுக்கப்பட்டிருக்கிறது. இ[illegible] நரிசி அனுப்பும் கொச்சியிலே[illegible] இறக்கப்படும்.

மாலை மணி

சென்னை 29—6—50 வியாழக்கிழமை

யாருடைய குற்றம்?

கல்வி, கல்விக்காகக் கற்பதாக இருக்கவேண்டுமே யொழிய வாழ்க்கையின் குறிக்கோளை நிறைவேற்றும் குறுக்குவழியாக அதனைக் கொள்ளக்கூடாது என்ற உபதேசத்தைக் கனதனவான்கள் சொல்லும் இடங்களிலெல்லாம் கூறத் தவறுவதில்லை.

கல்வி, கல்விக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற உபதேசத்தைக் கனதனவான்கள் மட்டும்தான் கூறுவதுமில்லை—அவர்கள்தான் கூறி வருகிறார்கள்.

நாட்டில், வாட்டும் வறுமைப் பிடியில் சிக்கி உழலும் ஏழை மக்கள் கல்வியை கல்விக்காக மட்டுமல்லவே, வாழ்க்கையில் ஒரு கொழுகொம்பாகவும் பயன்படுத்தவே விரும்புகின்றனர். சொத்தோ சுகமோ பொன்னோ, பொருளோ, வியாபாரமோ, சந்தியோ அற்று வாழும் வறியவர்களுக்கு உற்ற துணையாகவும், எதிர்செல்லும் கொழுகொம்பாகவும் இன்றைய சூழ்நிலையில் விளங்குவது கல்விச்செல்வம். அந்தப் படிப்பு என்னும் கொழுகொம்புதான், வாழ்வின் பசுமைப் பகுதிகளைச் சிறிதளவாவது ஏழை எளியவர்களுக்கு சுகிக்க செய்து தருகிறது.

படிப்பின் மூலம் தாம் பெறும் அறிவையும் ஆற்றலையும் விற்றால், அதன் மூலம் வருவாய் கிடைக்கும். அந்த வருவாயை உயிர்வாழ்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற எண்ணத்தின் மீதே பலரும் படிப்பைத்தேடி அலைகின்றனர். படிப்பைப் படிப்புக்காகவே பயன்படுத்த வேண்டும் என்ற பண்பை அறியாதவர்களல்லர் அவர்கள்; நாட்டில் நடமாடும் பஞ்சமும், வறுமையும், ஏழ்மையும் அவர்களை அந்த அளவுக்குத் துரத்தியடிக்கின்றன. குற்றம், நாட்டைச் சார்ந்ததேயல்லாமல், ஏழைமாணவர்களைச் சார்ந்ததல்ல. வேறு வழி ஏதும் இல்லாத காரணத்தாலும் அப்படியே இருக்கிறது என்று கூறினாலும் அதனைச் சுட்டிக்காட்டுவோர் இல்லாத காரணத்தாலும், அப்படியே சுட்டிக்காட்டப்பட்டாலும், அந்த வழியைப் பின்பற்றுவதற்கு சக்தியளிக்கப்படாத காரணத்தாலும், கல்வியை உயிர்வாழ்க்கையின் சாதனமாகக் கொள்ளவேண்டிய அவசியம் ஏழை மாணவர்களுக்கு எங்கும் ஏற்பட்டு விடுகிறது. இதை மாணவர்களின் [illegible]பட்ட கொள்கை என்று [illegible]க்கூறமுடியும்? எத்தர் [illegible]மோசக்காரர்களும் [illegible]னும் கூறுவார்கள்; [illegible]லும் நேர்மையிலும் [illegible]டையவர்கள் எங்[illegible]கூறத்துணிவர்?

[illegible]இருக்கும் நிலைமையை [illegible]ற்றிடமைக்கவோ, அல்லது [illegible]ட்டினளவு, வசதி வாய்ப்பு அகியவற்றைப் பெருக்கிக் காட்டவோ சிறிதும் முயற்சிக்காமல், எந்தப் படிப்பைப் படித்தால் வாழ்க்கைக்குச் சிறிது அதிகப்படி வசதி அளிக்குமோ அந்தப் படிப்பைப் படிக்கத் தேடி அலைந்து திரிவாரை ஏளனம் செய்ய முற்படுவது அன்புடைமையுமாகாது, அறிவுடைமையுமாகாது மாறாக ஆணவம்—அங்காரம்—அறியாமையேயாகும்!

இப்படிப்பட்ட ஆணவ சொரூபமெடுத்து, ஏளனச் சிரிப்பு சிரித்து மாணவர்களைக் கேலி செய்து நிற்கிறார் ஒருவர்! யார் அவர்? சாதாரணமானவர் அல்ல, கனமானவர்! யார் அந்தக் 'கனம்'? வேறு யாருமில்லை, மந்திரி மாதவமேனன் தான்!

மதிக்கும் மந்திரி மாதவமேனனுக்கும் பல வேலைகளிலே தொடர்பு ஏற்படுவதில்லை! ஆனால் ஆணவத்தைக் கட்டி அணைத்துக் கொள்ள மட்டும், அவர் எப்பொழுதுமே தவறுவதில்லை! சென்ற திங்களன்று சென்னை ஸர் தியாகராயா செட்டி உயர்நிலைப்பள்ளிப் புதுக்கட்டிடத்தைத் திறந்துவைக்கும் சீரிய பணியினை ஆற்றும்போது மந்திரி மாதவமேனன், சிலபல மொழிந்துள்ளார், வேடிக்கை பயக்கும் விதத்தில், வேதனை தரும் வகையில்!

"பௌதிகம், ரஸாயனம் போன்ற விஷயங்களை எடுத்துக்கொண்டு ஹானர்ஸின் முதல் வகுப்பில் தேறியபலர், 'அப்பர்டிவிஷன்' குமாஸ்தாக்களாகவே செய்வது சர்வசகஜம். குமாஸ்தாவாக வேலை பார்ப்பதுதான் அவர்கள் தொழிலானால் இவர்கள் எல்லோரும் எதற்காகக் கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானம் போன்ற விசேஷ படிப்புகளில் மற்றவருக்கு இடமில்லாமல்செய்ய வேண்டும்?"

இது கல்வி அமைச்சரின் கூற்று. கல்லூரிகளில் பௌதிகம், ரஸாயனம் போன்ற படிப்புகளைப் படித்து, ஹானர்ஸின் முதல் வகுப்பில் தேறும் மாணவர்கள், தாம் பெற்ற அறிவை தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொள்வதற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் அதனை நாட்டிற்கும் நல்ல முறையில் பயன்படுத்தியாக வேண்டும் என்ற நல்ல நோக்கோடுதான், பல்கலைக் கழகத்தைவிட்டு வெளியேறுகிறார்கள். தோழர் மாதவமேனன் எண்ணுவது போன்று "அப்பர்டிவிஷன்" குமாஸ்தாவாகத்தான் போக வேண்டும் என்ற இன புத்தியோடு எவரும் வெளிவருவதில்லை; 'மாதவமேனன்கள் அரசாங்கம்' அவர்களைப் பயன்படுத்திக் கொள்[illegible]க்கு ஏற்றவகையில், [illegible]சாலைகளோ ஆராய்ச்சி[illegible]கூடங்களோ, உற்பத்திச்சாலைகளோ ஏற்படுத்தத் தவறியகாரணத்தால் தான் அப்படிப்பட்ட மாணவர்கள் "அப்பர்டிவிஷன்" குமாஸ்தாக்களாக மாறுகின்றனர் எந்த மாணவருடைய நெஞ்சைப் பிளந்து பார்த்தாலும், தம்முடைய அறிவு விஞ்ஞான வழிக்குப் பயன்படாமலேயே, குமாஸ்தா வழிக்குப் பயன்பட வேண்டாம் என்றக் கருத்து ஊசலாடிக் கொண்டிருப்பதைத்தான், எவரும் காணமுடியும் விஞ்ஞானப் படிப்புப் படித்தவர்கள் குமாஸ்தா நிலைக்கு வருந்து கண்டு வேதனைப்படவேண்டியவர்—வெட்கப்பட வேண்டியவர் தோழர் மாதவமேனனே யொழிய, அந்த மாணவர்களல்லர்!

நாட்டில் விஞ்ஞானிகளாகத் திகழ வேண்டியவர்கள், விஞ்ஞான சிற்பனர்களாக விளங்க வேண்டியவர்கள், குமாஸ்தாக்களாக இருக்கிறார்கள்! யாருடைய குற்றம்? அரசாங்கத்தாருடையதுதான் என்று ஆயிரம் தடவை வேண்டுமானாலும் கூறலாம். விஞ்ஞானத்திற்கு வாய்ப்பளிக்கும் அதுபோசக்கூடுமானால் மாதவமேனன்களைக் கண்டு ஏளனம் பேசி,எக்கொலிகொட்டி கேலிச் சிரிப்பு சிரிக்குமேயொழிய 'அப்பர் டிவிஷன்' குமாஸ்தாக்களைப்பார்த்து ஒருநாளும் சிரிக்காது—மாறாகக் கண்ணீர் விட்டுக் கதறிடும், தன் நிலை நாட்டில் கேவலப்படுத்தப்பட்டிருப்பதற்காக!

மந்திரி மாதவமேனன், கல்லூரியில் இடங்கள் குறைவாக இருப்பதைத்சாம் ஒப்புக்கொள்ளமுடியாது என்றும், பௌதிகம், இரஸாயனம், வைத்தியம், இஞ்[illegible]ரிங் போன்ற பகுதிகளுக்கு, அதிகமாக மாணவர்கள் மனுச்செய்து கொள்வதால்தான் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று அதேகூட்டத்தில் அறிவித்துள்ளார்.

பௌதிகம், இரஸாயனம், வைத்தியம், இன்ஜினீரிங் ஆகிய பகுதிகளுக்கு அதிகமாகமனுச்செய்து கொள்கிறார்கள் என்றால், அவைகள்தான் வாழ்க்கையின் தேவைகளை ஓரளவுக்காவது நிறைவேற்றித் தருகின்றன. அந்தப் பகுதிகளை விரிவாக்கி இடநெருக்கடி ஏற்படாமல் செய்வதுதான், அவ்வுடைமை, திறமையுடைமையேயல்லாமல், வாழ்க்கையின் தேவைகளைப் நிறைவேற்றித்தராத பகுதிகளை வைத்துக்கொண்டு; அவற்றில் அதிகமாக சேர்வார் இல்லையே என்ற குறைபடுவதில் அறிவுடைமையுமில்லை; திறமையுடைமையுமில்லை. கல்வியைக் கல்விக்காகவே சற்கக்கூடிய சக்தியுடையவிலாம் வருமான வழியைக் குறிக்கோளாகக் கொள்ளும்போது,ஏழை எளியவர்களின் நிலை எப்படி இருக்கும்! கல்விக்கும், வாழ்க்கைக்கும் சப்பந்தம் இருக்கின்ற காரணத்தால் தான், இவ்வளவு நெருக்கடிகள் ஏற்படுகின்றன! கல்வியைக் கல்விக்காகவே கற்று, வாழ்க்கையையும் இனிதே நடத்திச் செல்ல முடியும் என்ற சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்திவிட்டால், பின்னர் தோழர் மாதவமேன[illegible]ர் குறைபடவேண்டிய அவசியமேயிருக்காதே!

தோழர் மாதவமேனன் கனமாகிவிட்டார். ஆகவே, அவருக்குப் படிப்புகளில் உள்ள தாரதம்மியம் தெரிவதற்கு அவசியமில்லை! ஆனால், ஏழை எளியோர் அந்த தாரதம்மியத்தைப் பார்த்துத்தானே பொருளையும், நேரத்தையும், உழைப்பையும் செலவிடுவர்! இதுபற்றித் தோழர் மாதவமேனனுர் அதிசயப்படுகிறார் அல்லது ஆச்சரியப் படுகிறார் என்றால், அது யாருடைய குற்றம்?

"எல்லா மாணவர்களுக்கும் இந்த விஷயங்களில் இடங்கள் தருவது என்பது முடியாத காரணம், எனவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் வருங்காலம் பற்றி சரிவரத் திட்டமிட வேண்டும்"

என்று கல்வி அமைச்சர் பெற்றோர்களுக்கு ஆலோசனை கூறுகிறார். வாழ்க்கையோடு இயைந்துவராத படிப்பைப் படிக்க மாணவனே முன்வராத போது, பெற்றோர்கள் எப்படி முன்வருவர்? மேலும் எந்தப் படிப்பில் எவ்வளவு அக்கறை கொள்வது என்பதை முடிவு கட்டுபவர்கள் மாணவர்களே யல்லாமல், பெற்றோர்கள் அல்லவே! போதுமான அடிப்படை அறிவைப் பெற்றதற்கு பிறகு, எந்த விருப்பப் படிப்பைப் பெறவேண்டியது என்பது, மாணவர்களின் விருப்பத்தைப்பொறுத்ததே யல்லாமல், பெற்றோர்களைப் பொறுத்[illegible]ல்ல!

[illegible]சீரழிந்துகிடக்கும் கல்வித் துறையைக் கல்வியமைச்சரின் சிந்தனைக் கோளாறு, மேலும் மேலும் [illegible]ழிக்கக்கூடாது என்பதே[illegible] ஆவல்!

தி. மு. கழகச் சொற்பொழிவு

30 - 6 - 50

சென்னை (திருவல்லிக்கேணி) :—சி. என். அண்ணாதுரை, என். வி. நடராசன், ச. அப்பாத்துரை

2 - 7 - 50

குன்னூர் (நீலகிரி) :—இரா. நெடுஞ்செழியன்

பிரிட்டனுக்கு இந்திய புகையிலை பருத்தி ஏற்றுமதி

லண்டன், ஜூன் 28—

இவ்வாண்டின் முதல், நான்கு மாதங்களில் பிரிட்டன் இந்தியாவிடமிருந்து 29448758 பவுன் (ரூ. 387883644) மதிப்புள்ள பொருள்களை வாங்கியிருக்கிறதென்றும் பிரிட்டன் இந்தியாவுக்கு 29169319 பவுன் (ரூ 379201147) மதிப்புள்ள பொருள்களை அனுப்பியிருக்கிறதென்றும் வர்த்தகபோர்டு அறிவித்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து தெரியவருகிறது.

இக்காலகட்டத்தில், பிரிட்டனுக்கு இந்திய புகையிலை, பருத்தி இவைகளின் ஏற்றுமதி அதிகரித்திருக்கிறது. ஆனால், தேயிலையை பிரிட்டன் இவ்வாண்டு, இந்தியாவிலிருந்து குறைத்தே வாங்கியிருக்கிறது.

மக் ஆர்தர் கண்காணிப்பில் கொரியா

ஜப்பானின் இராணுவ தளபதியாக இருக்கும் ஜெனரல் மக்ஆர்தர் கொரியாவுக்கு மேல் செய்து வரும் போர் நடவடிக்கைகள் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுவிட்டார்.

இந்தியரின் வாதாடும் திறன்

கேப்டவுன் நீதிபதி பாராட்டு

கேப்டவுன், ஜூன் 28—

3000 பவுன் தங்கநகை மோசம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட இந்தியர், ஒரு மூன்று நாட்கள் தன் வழக்கை தானே மிகச்சாதுர்யமாக வாதித்ததற்காக நீதிபதி அவரை மிகவும் புகழ்ந்து பாராட்டினார். ஆனால், அவர்மீது குற்றம் ரூபிக்கப்பட்டு அவருக்கு 8 வருஷ 9 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

டெலிவிஷன் டெலிபோன்

லண்டன், ஜூன் 28—

டெலிவிஷன் டெலிபோன் எப்படி வேலை செய்கிறதென்பதை, சியூஜெர்ஸியின் அமெரிக்க சமான்டர்கள் சோதித்துப் பார்த்திருக்கின்றனர். கனெக்ஷன் கொடுத்தவுடன், டெலிபோனில் பேசுபவர் உருவம் ஒரு சிறிய ஸ்கிரீனில் தெரிகிறதாம்.

டெலிவிஷன் டெலிபோன் எதிர்காலத்தில் சாத்தியமென்பதை சுமார் 25 ஆண்டுகளுக்குமுன்பே, இசாக் மேகின் செய்த பிரசங்கத்தில் டாக்டர் [illegible] என்பவர் குறிப்பிட்டிருந்தார். பலரால் கேலி செய்யப்பட்ட டெலிவிஷன் இன்றியமையாதது என்று இவர் அப்போது வற்புறுத்தினாராம்.

ஜார்டன் பட்ஜெட்

வருமானம் அதிகரிப்பு

அம்மான், ஜூன் 28—

ஜார்டன் பட்ஜெட்டில், சென்ற வருஷத்தைவிட, இவ்வருஷம் 1411690 பவுன் அதிக வருமானம் காணப்படுகிறது. இதில் பிரிட்டிஷ் கடன் 1000000 பவுனும் சேர்ந்ததாகும். —ராய்டர்

லண்டன், ஜூன் 28—

இசை அலங்கரித்த வைப்பதால், பெண்கள் நோயாளிகள் சீக்கிரம் குணமடைகின்றார்கள் என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

மதுரை மாவட்ட மாநாட்டு வரவேற்புக் குழுக் கூட்டம்

மதுரை மாவட்ட தி. மு. கழக வரவேற்புக் குழுக் கூட்டம்.2-7-50 ஞாயிறன்று மாலை 3-மணிக்கு [illegible] பூவந்தான் னகரம் இல்லத்தில் நடைபெறும். அப்பொழுது வரவு செலவு கணக்கு பார்த்து சரிசெய்ய வேண்டியிருக்கலால் வரவேற்புக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாநாட்டின் டிக்கட்டுகள் பெற்றுச் சென்றவர்கள் விற்பனையான பணத்தையும், மீதி டிக்கட்டுகளையும் கூட்டத்தில் வந்து ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தா. ஆவுடையப்பன்
வரவேற்புக் கழகத் தலைவர்.

ஜனநாயகத்தைக் காக்க நேரடி நடவடிக்கை எடுப்போம்

(0)

கட்டாய இந்தி தொலையாவிடில் கட்டாய கிளர்ச்சி தோன்றும்

(:0:)

தொழிலுறவு மசோதா பித்தலாட்டம் ஒழிக!

(0)

வ. ஆற்காடு மாவட்ட தி. மு. க. மாநாட்டுத் தீர்மானங்கள்

1. இன்றைய காங்கிரஸ் கட்சி அரசாங்கம், மற்ற கட்சிகளின் பேச்சுரிமை எழுத்துரிமை ஆகிய அடிப்படை உரிமைகளையே பறிக்கும்வகையில், பத்திரிகைகளுக்கு ஜாமீன், புத்தகங்கள் பறிமுதல், நூல்கள் மீது வழக்கு, நாடகங்களுக்குத் தடை, கூட்டங்களுக்கு 144 என்று அடக்குமுறைகளை ஏவி, ஜனநாயகத்தையே அழித்துவருவதை, இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதோடு, இப்போக்கினை அரசாங்கம் மாற்றிக்கொள்ளாவிடில், நேரடி நடவடிக்கை எடுக்க நேரிடுமென, எச்சரிக்கை விடுக்கிறது.

முன்மொழி:—சி. பி. சிற்றரசு.

வழிமொழி:—சென்னை கே. கோவிந்தசாமி; டி. வி. நாராயணசாமி.

2. தமிழ் மக்கள் எவரும் விரும்பாத இந்தி மொழியை, தேசியமொழி என்ற பெயரால், மூன்று மொழி பயில முடியாத நிலையிலே உள்ள இளம் மாணவர்களுக்கும், அம்மொழியைக் கட்டாயப்படுத்தி இருப்பதை இம்மாநாடு மிக மிக வன்மையாகக் கண்டிப்பதுடன், அடுத்துச் செய்ய இருக்கும் கல்வித்துறை சீர்திருத்தச் சட்டத்திலாவது, 14-வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் மட்டுமே விருப்பினால் மட்டுமே இந்தியைப் படிக்குமாறு பாடத்திட்டம் வகுக்கவேண்டுமெனவும் வற்புறுத்துவதோடு அவ்வாறு செய்யாவிடில், பொதுமக்கள் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி, துவக்க நேரிடுமெனவும் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுக்கின்றது.

முன்மொழி:—இரா நெடுஞ்செழியன்.

வழிமொழி:—ஜே. தீனதத்தன்.

3. நமது மாகாணத்தில், கடந்த ஆறு மாதங்களாக கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் சரிவர சப்ளை செய்யாமல் இருப்பதினால், சுமார் 5 லட்சம் நெசவாளர்களும், அவர்களை நம்பி வாழும் சுமார் 25 லட்சம் மக்களும் பட்டினிகிடந்து, சாகவேண்டிய நிலையில் இருப்பதை இந்த சர்க்கார் கண்டும்வாளா இருப்பதை இம்மாநாடு கண்டிப்பதோடு, நமது மாகாணத்தில் சுமார் 8 000 பேல் நூல்கள் உற்பத்தியாயும், நெசவாளர்களுக்கு 10000 பேல் நூல்கள் மட்டுமே கொடுத்து, மீதி நூலை வடநாட்டுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்துவருவதை நிறுத்தி, இங்குள்ளோரின் தேவைக்கு மிகுதியை ஏற்றுமதி செய்யுமாறு இம்மாநாடு வற்புறுத்துவதோடு, திருநெல்வேலி சேலம் முதலிய மாவட்டங்களில் உள்ள நெசவாளர்களுக்குப் பஞ்ச நிவாரணமாக வாரம் ரூ 2½ வீதம் தற்காலிகமாகக் கொடுத்தும், மற்ற மாவட்டத்தில் அவ்விதம் ஏற்பாடு செய்யாமலிருப்பதை இம்மாநாடு கண்டிப்பதோடு, ஐவுளி மில்களில் 36 இன்சுக்கு மேற்பட்ட அகலமுள்ள துணிகளை உற்பத்திச் செய்கைத் தடுத்து, நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு இம்மாநாடு வற்புறுத்துவதோடு நெசவாளர்களுக்கு நியாய விலையில் தேவையான நூல் போதுமான அளவு கிடைக்க அரசியலார் ஆவன செய்யுமாறு இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது.

முன்மொழி:—எம். எஸ் இராமசாமி.

வழிமொழி:—கே. பி. சுந்தரம்.

4. நாட்டில் மக்கள் பசியாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் வாடிவதையும்போது, மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வழி செய்யாமல், அமைச்சர்கள் வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணமும், சர்க்கார் செலவில் செய்து, மக்களின் பணத்தைப் பாழ்படுத்துவதை, இம்மாநாடு கண்டிக்கிறது.

முன்மொழி:—அ. ப. நடராசன்.

வழிமொழி:—தி. எத்திராசன்.

5. இரயில்வே நிலையங்களிலெல்லாம் அவசியம் இல்லாத வகையில், இந்தியின் ஆதிக்கத்தை அசம்பாவத்தோடு எடுத்துக் காட்டும் வகையில் நிலையங்களின் பெயரை-தலைப்பில் இந்தியில் உடனேமாற்றி தமிழில் முதலிலும், பின்னரே இந்தியிலும் எழுதவேண்டுமென, மத்திய அரசாங்கத்திற்கு அறிவிக்கிறது.

முன்மொழி:-வி. முனுசாமி

பின்மொழி:— கோ. இறைமுடிமணி.

6. இலங்கை அரசாங்கம், சிங்கள மொழியோடு சமத்துவமாக தமிழும் இடம்பெறும்படி, தமிழையும் அரசாங்க மொழியாகச் செய்து [illegible] பெருந்தன்மையை இம்மா[illegible] பாராட்டுகிறது.

முன்மொழி:- மணிஎழி[illegible]

வழிமொழி:-வி. டி. அண்[illegible]மலை.

7. சித்தூர் [illegible]வட்டத்தி[illegible] உள்ள ஆந்[illegible] இனவுணர்ச்சியோ, கன்னிலையே இன்றி, தமிழ் படிக்கும் மாணவர்களுக்குப் பள்ளிகளில் இடமில்லாமல் செய்வதற்கு முற்பட்டுள்ள சூழ்ச்சியை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், இதன் விளைவாக இன மக்களுக்கிடையில் மொழிகாரணமாகப் பகை வளர நேரும் என எச்சரிக்கிறது.

முன்மொழி:-ஏ. எல். சஞ்சீவி.

வழிமொழி :-இலட்சுமிபதி

8 தொழிலாளர் உரிமைக் கிளர்ச்சிகளை அடக்கும் விதத்திலும், அடிப்படை உரிமைகளைப் பறிக்கக்கூடிய விதத்திலும், தொழிலாளர் நலன்களை பாதிக்கக்கூடிய வகையிலும் முதலாளிகளுக்குச் சலுகைக் காட்டும் வகையிலும் அமைந்த இந்திய அரசாங்கத்தின் தொழில் உறவு மசோதாவை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன் அந்த மசோதவை ரத்து செய்யும்படி இந்திய அரசாங்கத்தை வற்புறுத்துகிறது.

முன்மொழி:—காஞ்சி கல்யாணசுந்தரம்.

வழிமொழி:—மதுரை எஸ். முத்து, அ டச்சைபிள்ளை.

9. பிற்படுத்தப்பட்டுள்ள வகுப்புகள் சிறிதேனும் முன்னேற்றமடைய வேண்டுமென்பதற்காக, அரசாங்க அலுவலகங்களிலும், உயர்தரக் கலவித்துறையிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள, வகுப்பு உரிமைச் சட்டத்தை, ஆதிக்க வகுப்பினர் எதிர்த்து ஒழிக்க ஒலமிடுவது, [illegible] சூழ்ச்சியாகத் திட்டம் வகுப்பதும், வழக்காக முற்படுவதும் மேலும் மேலும் வகுப்பு வேற்றுமையையும் வெறுப்புணர்ச்சியையுமே வளர்க்கக் காரணமாகும் என இம்மாநாடு அவர்களுக்கு எச்சரிக்கை செய்கின்றது.

முன்மொழி:-தலைவர்.

என். வி. நடராசன்

ஆரணி மாவட்ட தி. மு. கழக முதல் மாநாட்டு இரண்டாம் நிகழ்ச்சியில் தோழர் என். வி. நடராசன் அவர்கள நாடு ஆள ஆட்சிபீடமேறிய ஆட்சியாளரின் ஆணவப் போக்கினையும், தொழிலாளர்கள் உரிமை இந்த ஜனநாயக ஆட்சியில் எவ்வளவு பறிக்கப்படுகிறதென்பது பற்றியும், நாட்டிலே பரவிவரும் பயங்கரப் பஞ்சத்தைப் பற்றியும், வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசிகள் துன்பம் ஆகியவை பற்றியும், நாடு பிரிய வேண்டிய அவசியம், தி. மு. கழகத்தின் இலட்சியம், தேர்தலில் கலந்துகொள்ளாத காரணம் ஆகியவை பற்றி நீண்டதோர் சொற்பொழிவு ஆற்றினர்.

தில்லைவில்லாளன்

அடுத்துத் தோழர் தில்லைவில்லாளன் அவர்கள் மாணவர்கள் கடமை, அவர்களின் முன்னேற்றம், பள்ளியிலே அவர்களுக்கு இடம், ஆகியவைபற்றிப் பேசினர். பிறகு தீர்மானங்கள் கொண்டுவந்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

அடுத்துபொதுச்செயலாளர் தோழர் சி.என். அண்ணாதுரை அவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். (பேசியபின்னர்வரும்)

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

	ரூ.	அ.	பை
முன்வரவு	3168	6	6
எம். எஸ். எம். இரயில்வே பெரம்பூர் லோகோ ஓர்க்ஸ் தொழிலாளர்கள் :—			
ம. பா. மணி	2	0	0
பி. கிருட்டிணன்	2	0	0
சி. என் சோமசுந்தரம்	1	0	0
ஆதிகேசவலு	1	0	0
கிருட்டிணன்	1	0	0
ஏ. அமுனுதீன்	1	0	0
எம். டி. அஜீசோத்தின்	1	0	0
பி. ஆர். மாசிலாமணி	1	0	0
பெ ம துரைசாமி	1	0	0
கே. ரங்கமன்னர்	1	0	0
பி. டி. ராஜன்	1	0	0
கு. முத்து	1	0	0
கோவிந்தராஜு	1	0	0
எம். துரைக்கண்ணு	1	0	0
எம். ஏழுமலை	1	0	0
கே. ஆறுமுகம்	1	0	0
எஸ். தனக்கோட்டி	1	0	0
சொக்கலிங்கம்	0	8	0
ஏ. கோபால்	0	8	0
மா. மன்னர், பெங்களூர்.	0	8	0
	3188	14	6

காமன்வெல்த் சர்க்கார்களுடன் ஒயிட் ஹால் தொடர்பு

லண்டன், ஜூன். 28—

கொரியாவில் ஏற்பட்ட போர் சம்பந்தமாக காமன்வெல்த் நாடுகளின் சர்க்கார்களுடன் ஒயிட் ஹால் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பதுடன் தனக்குக் கிடைக்கும் தகவல்களை அவ்வப்போது தெரிவித்துவருகிறது.

கொரியாப்போரைத்தொடர்ந்து நிலைமை மோசமாகலாம் என்றும், ஆகவே மேற்கு ஐரோப்பியநாடுகளின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தவேண்டும் என்றும், ஆசியாவில் கட்டுப்பாடாகப் பகுத்து [illegible] வழி செய்யவேண்டுமென்று இங்கு வற்புறுத்தப்பட்டு வருகிறது.

கொரியாவில் ஏற்பட்டுள்ள நிலைமையைக் குறித்து இன்றைய பாகின் தான் உட்பட எல்லா தென்கிழக்கு நாடுகளையும் எச்சரித்து, தலையிடாமல் தங்களுக்குள்ளேயே இல்லைச் சச்சரவுகளில் ஈடுபடாமல் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ளும்படியும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன.

பிரிட்டனில் எண்ணெய் கப்பல்

லண்டன், ஜூன் 28—

40000 டன் எண்ணெய் கொள்ளும் ஒரு கப்பலைக் கட்ட, பிரிட்டனுக்கு ஆர்டர் கொடுப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் அமெரிக்க எண்ணெய் கம்பெனிக்கும், பிரிட்டிஷ் கப்பல் கட்டும் ஆலைகளுக்குமிடையே நடைபெற்றுவருவதாகத் தெரிகிறது.

இத்துடன் மாநாடு முடிவடைய, இரவு 10 மணிக்கு தோழர்கள் அண்ணாதுரை, அவர் தம் குழுவினர் கே. ஆர். இராமசாமி ஆகியோர் நடிக்கும் 'சந்திரமோகன்' நாடகம் நடைபெற்றது. தலைவரவர்கள் வரவேற்புக் குழுவினர்க்கும், மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் தோழர்களுக்கும் மாநாடு இத்துணை சிறப்புடனும், வெற்றியுடனும் நடைபெற ஒத்துழைத்த [illegible]ர்கள் அனைவருக்கும் ந[illegible], மாநாடு சிறப்புடன் முடிவுற்றது.

நெல்லை மாவட்ட தி. மு. கழக அமைப்புக் கூட்டம்

கோவில்பட்டியில் நடைபெறும்

நெல்லை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டத்தை, திருச்சியில் நடைபெற்ற பொதுக்குழுவின் தீர்மானப்படி, கோவில்பட்டித் தோழர் S. வே. அ. வள்ளிமுத்து அவர்கள் அமைப்பாளராக இருந்து நடத்திக் கொடுக்கப் பொதுச் செயலாளரால் அனுமதியளிக்கப்பட்டிருக்கிறார்.

அமைப்புக் கூட்டம் ஜூலை திங்கள் 16 ம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று கோவில்பட்டியில் நடைபெறும்.

நெல்லை மாவட்டத்திலுள்ள கிளைக் கழகங்கள் ஒவ்வொன்றும், அதற்குள் செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டி, இரண்டு இரண்டு பிரதிநிதிகள் வீதம் மாவட்டக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே அமைப்புக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.

மாவட்டக் கழகத் தேர்தலை பிரசாரக் குழுச் செயலாளர் தோழர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் நடத்திவைப்பார்.

மாவட்டக் கழகம் தேர்[illegible] தெடுக்கப்படும் அன்[illegible] மாவட்ட மாநாடு நடத்[illegible] பற்றியும் ஆலோசிக்க[illegible]

நெல்லை மாவட்[illegible] கழகத் தோழர்கள் [illegible] யாக இருந்து, [illegible] கழகத்தைச் சீரிய மு[illegible] அமைக்கும்படியாகக் [illegible] கொள்கிறேன்.

என். வி. நடராசன்
மத்திய அமைப்புக்குழு
செயலாளர்

சர். P. T. தியாகராயர் நினைவு நாள்
பொதுக்கூட்டம்

இடம்:—சுப்பராய முதலித் தெரு, திருவட்டீஸ்வரன்பேட்டை
(எல்லிஸ் ரோட் சமீபம்)

காலம்:—30—6—50 வெள்ளி மாலை 5-30 மணிக்கு

தலைவர்:—K. அப்பாதுரை M. A., L. T.

சொற்பொழிவாளர்கள்:—

C. N. அண்ணாதுரை M. A., N. V. நடராசன்

தி. மு. கழகம். திருவல்லிக்கேணி.

அறிவுப் புரட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்றி மலையாளிகள் நிறைந்த திருவனந்தையிலும், கள்ளிக்கோட்டையிலும், கன்னடர்கள் வாழும் மைசூரிலும், ஆந்திர தேசத்தில் பெல்லாரி முதலிய இடங்களிலும் கடல் கடந்த இலங்கையில் பலப்பல இடங்களிலும் மலேயாவில் நகரங்கள்தோறும், நமது கழகம் கிளைத்திருக்கின்றது. நமது கழகத்தின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கவிதத்திலே மட்டுமல்ல, குறைந்த காலத்திலே பாராட்டத்தக்க விதத்திலே, பாரான்வோர் பார்த்து மிரளும் அளவுக்குவளர்ந்திருக்கிறது எனத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அளவே இல்லை

எனவேதான், இம்மாநாடு வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள திராவிட மக்களுக்கு நமது கொள்கைகளை எடுத்துக் கூறவும்; நிலைமைகளை உணர்ந்து வழி முறைகளைக் கண்டறிந்து தீர்மானங்கள் நிறைவேற்றி பணியாற்றவும், கூடியுள்ளது.

இத்தகு மாநாடு நடைபெறுவதைத் தடுக்ககாங்கிரஸ்காரர்கள் பெருமுயற்சி செய்தார்களாம். எப்படி எப்படியோ முயன்றும், அவர்களுடைய பொய்களுக்குச் சான்று ஏதும் கிடைக்காத நிலையில் மாநாடு நடைபெற முடிந்துள்ளது. காங்கிரஸ்காரர்கள் செய்ய வேண்டிய காரியங்கள் பலப்பல இருக்க, அவை எவை என்றும் அறியாது எந்த நல்லதையும் செய்யும் சிந்தனை இல்லாது முயற்சியும் செய்யாது, இப்படிப்பட்ட தேவையற்ற நியாயமற்ற காரியத்தை ஊருக்கு ஊர்செய்துவருகிறார்கள். நல்லது செய்யும் மனம் திறன் ஆகியவை அவரிடம் இல்லாவிடினும், பொல்லாது செய்யும் புத்திக்கும் முயற்சிக்கும் அளவே இல்லை இந்த நல்லவர்களுக்கு

இல்லை அந்தாதி

நாட்டிலே வறுமைப் புயல் வாட்டுகிறது. பொருளில்லாதவர்கள் புண்பட்ட உள்ளத்தோடு புரட்சியை எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டுள்ளனர். உணவுப் பொருள் உற்பத்தியோ, மேலும் மேலும் [illegible]படுகிறது. 'ரேஷன்' அளவு [illegible]களுக்கு நாள் [illegible] உள்ளது. வேலை [illegible] இன்டாட்டம் வாலி[illegible] சமூகத்தைப் பிடித்து [illegible]கிறது. ஊருக்கு [illegible]விக்கும் உழவர்கள், [illegible] கஞ்சி காய்ச்சவும் [illegible] நேவராகிவிட்டனர் [illegible] மானம் காக்கும் [illegible]வர்கள், தங்கள் [illegible] மானத்தைக் காத்திட [illegible] அணியற்றவராகிவிட்டார்கள். நாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து, நாட்டினையே நல்ல வீடாக்கித் தரும் தொழிலாளர்கள், நாம் குந்தி இருக்கும் குடிசைக்கும் கதியற்றவராகிவிட்டனர். மற்றும் அரசாங்க ஊழியர்களானாலும், கடுக்காவக்குப் பார்களானாலும், நமக்கு நான் அவதிக்குளாகி வருகிறார்கள். நாட்டிலே படித்தவர்கள்; கையெழுத்துப் போடத் தெரிந்தவர்களே மிக மிகக் குறைவு. நூற்றுக்கு எண்பத்து எட்டுபேர்கள் தற்குறிகள். இந்நிலையில். பிள்ளைகளைப் படிக்கவைக்க கருதும் பெற்றோர்கள்; தம் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களில் இடம் இல்லாமல் திண்டாடுகிறார்கள். நோயாளிகளுக்கு அஸ்பத்திரிகளில் இடம் கிடைக்கவில்லை. சில மருந்துகள்கூட போதுமான அளவு கிடைக்கவில்லை. எது எது தேவையோ, அவை நிறைவேற்றப்படவில்லை. உணவில்லை. உடை தக்கவிலையில் இல்லை, வீடுகட்ட வழியில்லை, பள்ளி நடத்தப் பணமில்லை, படித்தவர்களுக்கு வேலை இல்லை, மருத்துவமனை அமைக்க பணமில்லை, மருந்து தயாரிக்கும் திறன் இல்லை, ஏழை வாழ்வை உயர்த்த வகையில்லை, தொழிலாளர் கூலி உயர்த்த வழியில்லை, பொருள்களின் விலை ஏற்றத்தைத் தடுக்க, குறைக்க திறன் இல்லை, நாட்டுக்கு நல்லது செய்ய வக்கு, வழி, வகை, திறன் எதுவும் இல்லை; இந்த இல்லை அந்தாதி பாடும் இவர்களுக்கு, எது செய்யப்பட வேண்டும் என்ற புத்தியும், இல்லை, அனுல் உத்தமர்பெயர் சொல்லி, ஊராளும் கட்சியினராகிவிட்டதனாலேயே ஊராருக்கு எது எது அவசியமோ அதைத் தடைசெய்ய முயற்சிக்க மட்டும் தயக்கமேற்படவில்லை.

நித்திய செயல்

இன்றைய ஆளவந்தார் பொதுமக்களின் உரிமையை மதிக்க மறுக்கிறார்கள். எங்கட்டுப் பேச்சுரிமையையும், எழுத்துரிமையையும் பெறுவதற்காக, இவர்கள் ஒரு காலத்திலே ஓங்காரக் கூச்சலிட்டார்களோ, அதே பேச்சுரிமையையும் எழுத்துரிமையையும்தடுப்பதற்கு, இன்று சட்டம் செய்கிறார்கள். வழக்கு தொடுக்கிறார்கள். போலீசை ஏவுகிறார்கள், இராணுவத்தைப் பலப்படுத்துகிறார்கள்.

மாநாட்டைத் தடைசெய்வது, பொதுக்கூட்டத்திற்கு 144 போடுவது. புத்தகத்தை பறிமுதல் செய்வது, எழுதியவர், அச்சிட்டவர், வெளியிட்டவர் மீது வழக்குத் தொடுப்பது, பத்திரிக்கைகட்கு ஜாமீன் கேட்பது, நாடகங்களுக்கு [illegible]டை விதிப்பது சந்தேகப்பட்டவர்களைகேள்வி முறையின்றி, வழக்கு விசாரணை இன்றிச் சிறையிலே அடைப்பது. பலாத்காரத்தில் இறங்கக்கூடியவர்கள் என்று சொல்லி, தலைமறைவாக இருப்பவர்களைச் சுட்டுக்கொல்வது, சிறைச்சாலைக்குள்ளேயே துப்பாக்கிப் பிரயோகம் செய்து பழகிக்கொள்வது, எவனோ ஒரு கலகக்காரன் மறைந்திருக்கிறான் என்பதற்காக கிராமத்து மக்களையே ஸ்பெஷல் போலீசரைக்கொண்டு அடித்து, உதைத்து கொடுமைப்படுத்துவது ஆகிய செயல்கள் இன்றைய சர்க்காரின், காங்கிரசார்களின். நித்தியபடி செயல் ஆகிவிட்டன.

ஜனநாயகம் அழிக்கப்படுகிறது

இந்நிலை நீடித்தால், ஜனநாயகம் நிலைக்காது. மாறாக சர்வாதிகாரம் தலை தூக்கும். சர்வாதிகாரம் வளர்ந்த எந்த நாட்டிலும், மக்கள் அமைதி கெட்டு, வாழ்விழந்து புரட்சி மூலந்தான் புதுவாழ்வைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் அந்நிலை ஏற்படாமல், அமைதி குலைக்கப்படாமல், இரத்தம் சிந்தப்படாமல், அறிவையே எற்படுத்தும் புரட்சி மூலம், சிந்தனைப் பொறிகள் மூலம், மக்கள் உண்மை ஜனநாயகத்தை நிலைநாட்டச் செய்வதற்கே தி. மு. கழகம் பாடுபடுகிறது.

நமது கழகம், சுயமரியாதை இயக்கமாகிய அரும்பிய அக்காலத்திலேயே இந்த இலட்சியத்தை விளக்கும் 'குடியரசு' என்ற பெயரிலே தான்—நமது பத்திரிகை வெளிவந்தது வெள்ளுடை வேந்தர், திராவிடத் தோன்றல், சர். பிட்டி. தியாகராயர் தோற்றுவித்த நீதிக்கட்சியும், உண்மைக் குடியரசு அமையும் பொருட்டுதான் மக்கள் [illegible] சமத்துவ நிலை அடையும்படி. பார்ப்பனரல்லாதாரும், பிற்படுத்தப்பட்ட வகுப்பார்களும், முன்னேறுவதற்காக பாடுபட்டு வந்தது. வகுப்புவாரி பிரதிநிதித்துவம், நீதிக்கட்சியின் முயற்சியினால்தான் நிர்ணயிக்கப்பட்டது. அவ்வாறு சமூகத்திலும், மதத்திலும் கூட சமத்துவத்தைப் போதித்து, கல்வித் துறையிலும், அரசாங்க அலுவல்களிலும்கூட சமசந்தர்ப்பங்கள் கிடைக்கச்செய்து 'குடியரசை' உண்மை ஜனநாயகத்தை வளர்த்து வந்துள்ள நாம், இன்று ஜனநாயகம் அழிக்கப்படுகிறது, சர்வாதிகாரம், பாசிசம் வளர்கிறது என்பதை எண்ணும்போது வருந்தாமலிருக்க முடியவில்லை.

நல்லாட்சியில் நாட்டமில்லை

இன்றைய ஆட்சியோ எதிர்க்கட்சியை எப்படி அடக்குவது என்பதிலேசெலுத்தும் அளவு கவனம், எப்படி நல்லாட்சி நடத்துவது என்பதிலே செலுத்தவில்லை. மக்கள் தங்கள் குறைகளை மந்திரிகளிடத்திலே கூறினாலோ, மந்திரிகள், "மக்கள் குறையைப் பொருட்படுத்தக்கூடாது, அப்படியே குறை இருந்தாலும், குறையாகக் கருதக்கூடாது, கருதினாலும், தங்களிடம் (இந்தக் கனங்களிடம்) கூறக்கூடாது கூறினாலும் பதில் கேட்கக்கூடாது. பதில் கேட்டாலும் சொன்னதை ஏற்றுக்கொள்ள வேண்டும்—என்று இதையே கூட எல்லாக்கேள்விகளுக்கும் பதிலாகவே விடுகின்றனர்.

மாகாண பிரதமர் குமாரசாமி ராஜாவோ, யார் எது கேட்டாலும் இல்லை என்று சொல்லாத வள்ளல். பள்ளிக்கூடம்வேண்டுமா. மருத்துவமனை வேண்டுமா, வாசகசாலை வேண்டுமா, எது வேண்டுமானாலும், ஊரிலே உள்ள பெருந்தனக்காரர்களிடம் போய் முறையிடுங்கள், அவர்கள் செய்ய முன் வருவார்கள் வேண்டுமானால் நான் சொன்னதாகச் சொல்லுங்கள் என்று சிபார்சு செய்கிறார். இந்த உபதேசம் செய்ய, இவர்கள் ஏன் மந்திரிகளாக இருக்கவேண்டும் என்றுதான் விளங்கவில்லை.

ஆட்சி அழகு!

பணக்காரர்களிடத்தே, ஏழைகள்போய், பல்லிளித்து நிற்பது பழைய முறை. பணக்காரர்கள் ஆசிக்கத்தை நிலைநாட்டுவதற்குரிய வழி. அந்த முறையை உபதேசிக்கிறார் ஏழைபங்காளரின் பெயரால் முதல் மந்திரியாக இருப்பவர். ஒருவேளை, பணக்காரர்கள் மறுபடியும் தேர்தலுக்கு நிற்கும்போது ஓட்டு வாங்கவும் இந்தப் பேச்சும், திட்டமும் பயன்படலாம். அந்த அளவிற்கு ஆட்சி, நேர்மைத்திறமற்று, நெளியும் போக்குடையதாகப் பொதுமக்களுக்கு நன்மை செய்ய வகையற்று பணக்காரர்களைக் காட்டி, கையேந்தசொல்லத் துணிந்துவிட்டது. இதற்கு ஏன் ஒரு கட்சி, அந்தக் கட்சிக்கு ஆட்சி அதற்கொரு சட்டசபை, கைக்காட்டி மரங்களைப்போல சட்டசபை உறுப்பினர்கள், [illegible]காட்டி மரங்களை [illegible]ல மந்திரிகள், அதற்[illegible]ரு அணுமகர், பிரதம [illegible]திரியாக ஏன் என்பதுதான் தெரியவில்லை.

(தொடர்ச்சி நாளை வரும்)

புகைப் படங்கள்

அண்ணா — $8\frac{1}{2}$X$6\frac{1}{2}$ அளவு 100 ரூ. 15

நெடுஞ்செழியன் $8\frac{1}{2}$X$6\frac{1}{2}$ அளவு 100 ரூ. 15

போஸ்ட்கார்ட் அளவு அண்ணா படம் 100 க்கு ரூபாய் 8—0—0

அண்ணாவும், நெடுஞ்செழியனும் போஸ்ட்கார்ட் அளவு ரூ. 8—0—0

விவரங்கட்கு:— பதி பிரதர்ஸ், காஞ்சிபுரம்.

தாராபுரம் தொகுதியில்

30—6—50ல் நடைபெறும்

சென்னை சட்டசபை தேர்தலில்

ஜனராஜ்ய கட்சி அபேட்சகர்

திரு. S. ரத்னசாமி கவுண்டருக்கு

பச்சைப் பெட்டியில்

தயவுசெய்து ஓட்போடவும்

(விளம்பரம்)

ஏஜெண்டுகள் தேவை

மாலை "மாலைமணி"யை விற்பனைசெய்ய முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் கீழ்க்கண்ட இடங்களுக்கு தேவை

தஞ்சை, வேலூர், நாகை

மானேஜர்:—"மாலைமணி

மருந்துக்கட்டுப்பாடு சட்ட அமுல்

சென்னை, ஜூன் 28—

மருந்துக் கட்டுப்பாடு சட்டக் (டிரக் கன்ட்ரோல் சட்டம் 1949) அமுல் நடத்த சுகாதார விசாரணை அதிகாரிகளுக்கும் வெளியூர்களில் [illegible] அதிகாரிகளுக்கும் அதிகாரம் அளிக்கப்படலாம் என்று, சென்ட்ரல் போர்டு வெளியிட்ட யோசனையை சென்னை சர்க்கார் அங்கீகரித்துவிட்டார்.

ரேஷனிங் ஆபீஸர்கள் மூன்றாவது கிரேட்ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள், சப்ளை நிலைய அதிகாரிகள், தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில், இச்சட்டத்தை மீறுபவர்களை விசாரிக்க அதிகாரம் உண்டு என்று, சர்க்கார் உத்திரவில் கூறப்பட்டிருக்கிறது.

போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்தஸ்திற்கு மேற்பட்ட போலீஸ் அதிகாரிகளும், இத்தகைய குற்றங்களை விசாரணை செய்து, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க, சிவில் சப்ளை அதிகாரிக்கு ரிப்போர்ட் செய்யலாம் என்றும், [illegible] ரேஷன் அதிகாரிகள், தாலுகா சப்ளை அதிகாரிகள் மிர்க்கா அதிகாரிகள் முதலியவர்களும் இச்சட்டம் அமுல் நடத்தப்படுவதற்கு ஒத்துழைக்கலாம் என்றும் அவ்வுத்திரவு கூறுகிறது.

இனி நடப்பவை

சைதாப்பேட்டை:— 1-7-50-ல் தி. மு. கழகக் கமிட்டிக் கூட்டம், தோழர் கே. எஸ். காசிம் கடையில் காலை 10-மணிக்கு நடைபெறும். அவ்வமயம் தோழர் அண்ணாதுரை அவர்கள் சன்மானிக்கப்பட்டதற்காக நடைபெற்றதில், நம் பகுதிக் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்ய வேண்டியிருப்பதால், கமிட்டி அங்கத்தினர்கள் அனைவரும் தவறாது வரவேண்டுமாய், தலைச்செயலாளர் தோழர் வி. விசுவநாதன் அழைக்கிறார்.

* * *

சைதாப்பேட்டை:—மறுமலர்ச்சி சொற்பயிற்சி மன்றத்தின் சொற்பயிற்சிக்கூட்டம், 30 6 50 மாலை 6-மணிக்கு சடையப்ப முதலித்தெரு 2-வது இல்லத்தில் நடைபெறும். "புராணங்களும் இதிகாசங்களும்" என்னும் பொருள்பற்றி பலர் பேசுவர்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.